பொருளாதாரப் பேரழிவை எதிர்கொள்கிறது இந்தியா

அமெரிக்காவில் ராகுல் காந்தி பேச்சு

நியூயார்க், நவ. 18: இந்தியாவில் வேலையின்மை அதிகரித்துள்ளதுடன், உற்பத்தித் துறை முடங்கியுள்ளது; கல்வி முறையிலும் ஆழமான பிரச்னைகள் உள்ளது. நாடு பொருளாதாரப் பேரழிவை எதிர்கொண்டு வருகிறது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அவர் கூறியதாவது: இந்திய பொருளாதார மாதிரி கடந்த 10 ஆண்டுகளில் எதிர்பார்த்த பலன்களை அளிக்கவில்லை. 'மேக் இன் இந்தியா', 'ஸ்டார்ட்அப் இந்தியா' போன்ற திட்டங்களும் நாட்டின் முடங்கிய பொருளாதாரத்தை மீட்டெடுக்கத் தவறிவிட்டன. இந்தியாவில் மிகப்பெரிய வேலையின்மை பிரச்னை உள்ளது. இதை ஊடகங்கள் மறைத்தாலும், உண்மை நிலையை மாற்ற முடியாது.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும், விவசாயமும் இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளன. அவை இந்தியாவில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன. சேவைத் துறையால் அனைவருக்கும் வேலை வாய்ப்பை வழங்க முடியாது; 1 முதல் 5 சதவீதத்தினருக்கு மட்டுமே வேலை வழங்க முடியும். உற்பத்தித் துறை இல்லாமல் இந்தியா பொருளாதார ரீதியாக வெற்றி பெற முடியாது.



மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியுடன் தற்படம் எடுத்துக் கொண்ட நியூயார்க்கில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழக மாணவர்கள்.

இந்தியாவில் தனியார் முதலீடுகள் ஏன் அதிகரிக்கவில்லை? அம்பானி, அதானி போன்ற தொழிலதிபர்கள் மட்டும் வளர்ச்சி அடைவது ஏன்? பழங்குடியினரின் நிலங்கள் அவர்களின் ஒப்புதலின்றிப் பறிக்கப்படுதல், சிறுபான்மையினர், தலித்துகள் மற்றும் விவசாயிகள் மீதான தாக்குதல்கள் இந்தியாவில் அதிகரித்துள்ளன. அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்கள் கடந்த 10 ஆண்டுகளாக ஒருசிலரிடம் மட்டுமே குவிந்து வருகின்றன. இதன் காரணமாகவே இந்தியாவில் தற்போது போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தேர்தல்கள் முறைகேடாக நடத்தப்படும் நிலையில், அரசியல் செயல்பாடுகள் இந்தியாவில் முடங்கியுள்ளன. தேர்தல் முறையைச் சீரமைக்காமல் இந்தியாவில் எதுவும் மாறாது. ஜனநாயக நடைமுறைகளை மீட்டெடுக்க காங்கிரஸ் கட்சி செயல்பட்டு வருகிறது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்வதும் அதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகும் என்றார்.

அமெரிக்காவில் குடியேற்றக் கொள்கைகள் கடுமையாக்கப்படுவதால் வெளிநாடுகளில் படிக்கவும், வேலை செய்யவும் விரும்பும் இந்திய மாணவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் குறித்த கேள்விக்குப் பதிலளித்த ராகுல் காந்தி, 'இந்தியாவின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்னைகளுடன் ஒப்பிடுகையில் அது சிறிய பிரச்னை தான். வெளிநாடுகளில் படிக்கும் வாய்ப்புகளால் பல இந்திய மாணவர்கள் பயனடைந்துள்ளதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அவர்கள் உள்நாட்டுப் பிரச்னைகளுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்' என்றார்.

இதனிடையே, அமெரிக்க இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சி தோல்வி குறித்த கேள்விக்கு எரிபொருள் விலை உயர்வே காரணம் என்று குறிப்பிட்ட ராகுல் காந்தி, அமெரிக்காவின் செல்வாக்கு வேகமாகக் குறைந்து வருவதாகவும், ஈரான் மீது தனது விருப்பத்தைத் திணிக்க அமெரிக்காவால் முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இந்தியாவைவிடக் கடுமையான பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்கின்றன. இந்தியாவில் செலவுகள் குறைவாக இருப்பதாலும், பொருளாதார நெருக்கடிகளைத் தாங்கும் திறன் இருப்பதாலும் இந்தியா அவற்றைவிடச் சிறப்பாகச் சமாளிக்க முடியும் என்றும் அவர் கூறினார். ஆனால், இதே நிலைமை இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்தால், இந்தியா மிகப் பெரிய சிக்கலைச் சந்திக்க நேரிடும் என்று அவர் கூறினார்.

இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த ராகுல் முயற்சி

பாஜக குற்றச்சாட்டு



கௌரவ் பாட்டியா.

புது தில்லி, நவ. 18: இந்தியாவின் பொருளாதாரம்குறித்து அமெரிக்காவில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகளுக்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்தில் அவர் ஈடுபடுவதாகவும் இந்தியாவின் நற்பெயருக்கு அவர் களங்கம் ஏற்படுத்துவதாகவும் பாஜக குற்றஞ்சாட்டியது.

தில்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் கௌரவ் பாட்டியா கூறியதாவது:

இந்தியாவின் சர்வதேச நற்பெயரைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் ராகுல் காந்தி செயல்படுகிறார். அவர் பொறுப்பற்ற முறையில், இந்தியாவுக்கு எதிரான கருத்துகளைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். நிகழாண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி 7.8 சதவீதமாக உள்ளது.

மேலும், நாட்டின் வேலையின்மை விகிதம் 5 சதவீதத்திலிருந்து 4.9 சதவீதமாகக் குறைந்துள்ளது. தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் பெண்களின் வேலைவாய்ப்புப் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ளது.

இதே காலகட்டத்தில் சீனாவின் வளர்ச்சி 4.4 சதவீதமாகவும், அமெரிக்காவின் வளர்ச்சி 2.3 சதவீதமாகவும், ரஷியாவின் வளர்ச்சி 0.9 சதவீதமாகவும் உள்ளது. ஜப்பான், ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வளர்ச்சி முறையே 0.75, 1.3, 1.2 சதவீதமாக உள்ளது.

இந்நிலையில், இந்திய பொருளாதாரம் பேரழிவைச் சந்தித்து வருவதாக ராகுல் காந்தி எந்த அடிப்படையில் கூறுகிறார் எனத் தெரிவித்தார்.

பாஜக தேசிய ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ஆசிஷ் உஷா அகர்வால் கூறுகையில், உலகின் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியாவை பல்வேறு சர்வதேச அமைப்புகள் அங்கீகரித்துள்ள நிலையில், வெளிநாட்டுத் தளங்களில் ராகுல் காந்தி எதிர்மறையான கருத்துகளைத் தொடர்ந்து பரப்பி வருகிறார். இதற்கான நோக்கம் தான் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இதனிடையே, மத்திய கல்வித் துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்ட எக்ஸ் பதிவில், ராகுல் காந்தி வெளிநாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்தையும் அங்கு கொண்டு செல்வதாக விமர்சித்தார். இந்தியாவின் வளர்ச்சி மற்றும் ஜனநாயகம் குறித்த எதிர்மறையான அணுகுமுறையின் காரணமாகவே ராகுல் காந்தி வெளிநாடுகளில் இந்தியாவை விமர்சிப்பதாக பாஜக செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி தெரிவித்தார்.

பொருளாதார நிலை குறித்துப் பேசினால் அரசுக்கு அச்சம்: காங்கிரஸ்

ராகுல் காந்தியின் அமெரிக்கப் பேச்சுக்கு பாஜக கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், நாட்டின் பொருளாதார நிலை குறித்து கவலைப்படாமல், அது குறித்து ராகுல் காந்தி பேசுவதற்கும், உலக நாடுகள் அதைக் கேட்பதற்குமே மத்திய அரசு கவலைப்படுவதாக காங்கிரஸ் செய்தித் தொடர்புத் துறைத் தலைவர் பவன் கேரா விமர்சித்துள்ளார்.

பணவீக்கம், பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தாமல், அவை குறித்து எழுப்பப்படும் கேள்விகளைத் தடுப்பதிலேயே அரசு முனைப்புக் காட்டுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இத்தாலி அரசியல் தலைவருக்கு எதிராக மனு: உச்சநீதிமன்றம் நாளை விசாரணை

புது தில்லி, நவ. 18: தெலங்கனாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அரசுக்கு விரோதமாகப் பேசிய இத்தாலி அரசியல் தலைவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீது உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை (நவ. 20) விசாரணை மேற்கொள்ள உள்ளது.



ஜியாகோமோ ஃபிலிபெக்

இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் ஜாஹித் அலி என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த நவ.13, 14-ஆம் தேதிகளில் தெலங்காணா தலைநகர் ஹைதராபாதில் மாநில அரசு சார்பில், பாரத் உச்சி மாநாடு என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஐரோப்பிய சோஷலிஸ்ட்ஸ் கட்சியின் பொதுச் செயலர் ஜியாகோமோ ஃபிலிபெக் கலந்து கொண்டார்.

அவர் நிகழ்ச்சியில் பேசுகையில், 'வாக்குத் திருடர்களே, பதவியைவிட்டு விலகுங்கள்' என்று மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ் பயன்படுத்தும் முழக்கத்தை எழுப்பினார்.

வெளிநாடுகளில் இருந்து வந்து அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மற்றவர்களுக்கும், இந்த முழக்கத்தை அவர் மொழிபெயர்த்துக் கூறினார். அவர் இந்திய ஜனநாயக அமைப்பில் நேரடியாகத் தலையிட்டு, மிகவும் அவதூறான முழக்கத்தை எழுப்பியுள்ளார்.

அவர் இந்தியாவுக்கு வந்து இங்குள்ள அரசு ஊழல் கறை படிந்தது, இதை உண்மையான அரசாக கருத முடியாது, இந்தியாவில் ஜனநாயகத்தை மீட்டெடுக்க எதிர்க்கட்சியுடன் இணைந்து செயல்படப்போவதாகப் பேசியுள்ளார். இது கடுமையான அத்துமீறலாகும். இதுதொடர்பாக ஃபிலிபெக் பேசிய காணொலிகளை சமூக ஊடகத்தில் இருந்து நீக்க வேண்டும். இந்தியாவின் உள்நாட்டு அரசியல் விவகாரங்கள் மற்றும் பிரசாரங்களில், வெளிநாட்டு அரசியல் பிரதிநிதிகள் ஈடுபடுவதற்கு எதிராக உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இந்த மனு குறித்து தலைமை நீதிபதி சூர்ய காந்த் முன்பாக, வழக்குரைஞர் சையத் ரிஸ்வான் அகமது புதன்கிழமை முறையிட்டார். இதையடுத்து, அந்த மனு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தலைமை நீதிபதி சூர்ய காந்த் தெரிவித்தார்.

நீதிபதிகள் நியமன வழிகாட்டு நடைமுறை: மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்

புது தில்லி, நவ. 18: உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் தொடர்பான திருத்தப்பட்ட வழிகாட்டு நடைமுறைகளை இறுதி செய்வதில் ஏற்படும் தாமதம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீது பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நோட்டீஸ் பிறப்பித்து உச்சநீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

லோக் பிரஹாரி என்ற தன்னார்வ அமைப்பு சார்பில் இதுதொடர்பான மனு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'நீதிபதிகள் நியமனம் தொடர்பான கொலீஜியத்தின் முடிவுகளை தக வல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டு வர உத்தரவிட வேண்டும்' என்றும் கோரப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம். எம். சுந்தரேஷ், பி.பி. வராலே ஆகியோர் அடங்கிய அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், இதுதொடர்பாக பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டனர்.

நேரடி சுவாதீன அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI பேங்க் லிட்., 4/10, மைதிரி டவர், பொம்மனஹள்ளி ஒஸூர் பிரதான சாலை, பெங்களூரு-560068

2002-ம் ஆண்டு கடனீட்புச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், மீது கையெழுத்திட்டுள்ளவர், ICICI பேங்க் லிட்-இன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்புச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகளில் விதி 3-இன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாள்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரினார்.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறியிட்டதால், கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது வசமெடுத்தில் (Possession) எடுத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அசையா சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரிலோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI பேங்க் லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்.	கடன்தார்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	சொத்து விவரம் / நேரடி சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்பு நாள் / கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூ.)	கிளையின் பெயர்
1.	விஜயலக்ஷ்மி பிரேம்குமார் I & சோபியா N / அ/எண்: எண். 1105, 11 வது தளம், ஸைட் 6, பரப்பு எண். 180, புதிய எண். பெம்பிள் கிரீன் அபெல் 6, மற்றும் விராம், சர்வே எண். 27/1பி, 30/1, 2, 3, 4, 5, 6, 7பி, 31, 3, 2/1, திருவண்ணூர், காஞ்சிபுரம் - 602105 / LBCHE00002045606 & LBCHE00002045819	நெட்டுயல் "A" சொத்து (சொத்து முழுவதும்) - காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, செங்கல்பட்டு பதிவு மாவட்டம், வல்லஞ்சேரிகண்டிகை சார்புதிவு மாவட்டம், பரப்பு எண். 180, புதிய எண். 135, பத்தூர் கிராமம், பின்வரும் சர்வே எண்களில் உள்ள பரப்பு - இனம் எண்கள், சர்வே எண்கள் பரப்பு ஹெக்: சதுர அடி. ஏ.கே - சர்வே எண்கள்., தெற்கு - சர்வே எண்கள்., கிழக்கு - சர்வே எண்கள்., மேற்கு - சர்வே எண்கள்., 1 30/2 Part 14.25 6, 207.30 30/2 Part 30/3 Part 30/5 Part 32/7 Part 2 30/5 Part 1.75 762.30 30/5 Part 30/3 Part 30/6 Part 30/2 Part 3 33/4 19.00 8,276.40 33/2 33/7 34/1 Part 33/3 Part & 33/5 4 33/5 Part 5.25 2, 286.90 33/3 Part 33/7 Part 33/4 Part & 33/7 33/5 Part 5 34/1 Part 52.00 22, 651.20 32/7 Part 34/1 Part 35/2 Part 33/2 Part, 33/4 & 33/7 Part 6 34/2 Part 19.00 8,276.40 34/2 Part 34/2 Part 33/4 Part & 34/5 34/2 Part 7 34/3 Part 6.00 2, 613.60 34/3 Part 34/4 Part 93/1A Part 34/3 Part 8 35/2 Part 12.50 5, 445.00 35/2 Part 35/2 Part 35/3 Part 34/1 Part, 34/2 Part & 35/2 Part 9 93/1B 33.00 14, 374.00 35/3 Part 93/2 Part 93/1C 93/1A 10 35/3 Part 57.50 25, 047.00 35/3 Part 93/1A Part, 93/1B Part & 93/1C Part 35/3 Part 35/2 Part 11 93/1A Part 30.50 13, 285.00 35/1A Part, 35/3 Part 93/2 Part 93/1B Part 34/3 Part, 34/4 & 34/5 Part 12 93/1C 30.00 13, 068.00 35/3 Part 93/2 Part 92/1 & 92/2 93/1B 13 33/2 Part 11.00 4, 791.00 33/2 Part 33/4 Part 34/1 Part 33/3 Part 14 137/4 Part 11.25 4, 900.50 137/2 Part 137/5 Part 137/6 Part 137/5 Part 15 137/5 Part 10.50 4, 573.80 137/4 Part 132/1 Part 137/6 Part 137/5 Part 16 32/7 Part 12.50 5, 445.00 32/7 Part 34/1 Part 35/2 Part 32/7 Part 17 33/7 Part 8.00 3, 484.00 34/5 & 33/5 Part 33/7 Part 34/1 Part 33/5 Part & 33/7 Part 18 34/4 18.00 7, 840.80 34/3 34/5 93/1A Part 34/1 Part & 34/2 Part 19 34/5 18.00 7, 840.00 34/4 137/1 Part 93/1A Part & 93/3 Part 34/2 Part 20 92/2 Part 6.25 2, 722, 50 92/1 Part 94/1 Part 92/2 Part 93/1C Part 21 93/2 59.00 25, 700.40 93/1A, 93/1B& 93/1C 137/4 Part & 137/6 94/1 Part 34/5 Part, 137/1 & 137/2 22 137/1 Part 23.25 10, 127.70 34/5 Part 137/2 Part 93/2 Part 137/1 Part 23 137/2 Part 17.00 7, 405.20 137/1 Part 137/4 Part 93/2 Part 137/2 Part 24 33/1 Part 0.50 217.80 33/1 Part 33/2 Part 33/2 Part 33/3 Part 25 33/3 Part 6.00 2, 613.60 33/3 Part 33/5 Part 33/2 Part & 33/4 Part 33/3 Part 26 92/1 Part 30.00 13, 068.00 35/3 Part & 92/1 Part 92/1 Part & 92/2 Part 92/1 Part 35/3 Part & 93/1C Part 27 137/6 15.00 6, 534.00 93/2 Part 133 Part 94/1 Part & 136 137/4, 137/5 & 132/1 28 94/1 Part 64.75 28, 205.10 92/2 Part & 94/1 Part 94/1 Part 94/1 Part 193/2 & 137/6 Part ஏர மொத்தம் 591.75 257,766.30 சதுர அடி (அதாவது 591.75 ஸென்ட்) பரப்பளவு கொண்ட, இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். நெட்டுயல் 'B' சொத்து - (மனஸ்வருக்கு இந்துடன் பிணைக்கப்படும் சொத்து). இதன் மேற்கண்ட நெட்டுயல் A சொத்தில் உள்ள 330 சதுர அடி பிரிக்காத பங்கு இடம் மற்றும் அதனுள் கூடிய இதர வகை வசதி உரிமைகள் முழுவதும். நேரடி சுவாதீன தேதி 13.11.2026	20.12.2024 ரூ. 27,65,521.32/-	சென்னை & காஞ்சிபுரம்

கடன்தார்(களுக்கும்) / ஜாமீன்தார்(களுக்கும்) மேற்படி கடன் பாக்கியை செலுத்துமாறு 30 நாள் அறிவிப்பு இதன் மூலம் அளிக்கப்படுகிறது. செலுத்தத் தவறினால், 2002-ம் ஆண்டு கடனீட்புச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8 & 9-ன் கீழான ஏதாத்துரைப்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாள்கள் முடிந்த பின் மேற்படி அசையா சொத்துகள் விற்கப்படும்.

நாள்: 19.11.2026
இடம்: சென்னை & காஞ்சிபுரம்

உண்மையுள்ள அதிகாரபூர்வ அலுவலர்
ICICI பேங்க் லிட்-க்காக

மேற்கு சைதாப்பேட்டை கிளை

இந்தியன் வங்கி — சன் ஷைன் அப்பார்ட்மென்ட்ஸ், 32/72, மேற்கு தேரடி தெரு, மேற்கு மாதவப்பேட்டை, சென்னை - 15. தொலைபேசி : 044-23713793. மின்னஞ்சல் : westsaidapet@indianbank.bank.in

பொது அறிவிப்பு

இந்தியன் வங்கியால் அமைக்கப்பட்ட வேண்டுமென்றே கடன் திரும்பச் செலுத்தாதோர் கண்டறியும் குழு (WDIC), பின்வரும் கடன்தாரர் / ஜாமீன்தாரர் / மேம்பாட்டாளர் / இயக்குனர் / நிறுவனத்தின் திர்வாக விவகாரங்களுக்கு பொறுப்பான நபர்கள் வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவர்களாக அடையாளம் காணும் செயல்முறையை தொடங்கியுள்ளது மற்றும் **06.11.2026** தேதியிட்ட WDIC உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன உத்தரவில் வேண்டுமென்றே திரும்பச் செலுத்தாதன் நிகழ்வுகள்' குறித்த விவரங்கள் உள்ளன மற்றும் WDIC உத்தரவு கிடைத்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அவர்களிடமிருந்து சமர்ப்பிப்புகளை வழங்குமாறு கோரப்பட்டது.

மேற்படி **06.11.2026** தேதியிட்ட உத்தரவு, அவர்களால் வழங்கப்பட்ட முகவரிகளுக்கு விரைவு அஞ்சல் / பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டன. ஆனால் அஞ்சல் கன்காணிப்பு பதிவுகளின்படி, அது பட்டுவாடா ஆகாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது/வழங்க முடியவில்லை.

அந்த முகவரியாளரின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :-

(1) M/s. ஸ்டார் எண்டர்பிரைசஸ், (கடன்தாரர் நிறுவனம்), உரிமையாளர் : வரலட்சுமி K, எண்.2, லலிதம் அப்பார்ட்மெண்ட், A பிளாக், தரை தளம், டெலிஃபோன் நகர், பெருங்குடி - 600 096, தமிழ்நாடு.
(2) Ms. K. வரலட்சுமி, (உரிமையாளர்), த/பெ திரு குப்பன், எண்.70, J D துரை ராஜ் நகர், 11வது தெரு, அமைந்தகரை, சென்னை - 600 029, **மேலும் இருப்பது :** D210, எண்.56, Aashntha லலிதம் அப்பார்ட்மெண்ட், டெலிஃபோன் நகர், மெயின் ரோடு, பெருங்குடி, காஞ்சிபுரம், தமிழ்நாடு - 600 096, **மேலும் இருப்பது :** முதல் தளம், எண்.52, அஞ்சுகம் அம்மையார் நகர், 7வது தெரு, பெருங்குடி, சென்னை - 600 096.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்(கள்), இந்த பொது அறிவிப்பின் மூலம் இந்தியன் வங்கி, மேற்கு சைதாப்பேட்டை கிளையை அணுகி அறிவிப்பை பெற்றுக்கொண்டு, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அந்த அறிவிப்புக்கு எதிரான அவரின் விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

குறிப்பிடப்பட்ட காலக்கெடுவிற்குள் பதிலளிக்க தவறினால், இந்த உத்தரவு முறையாக வழங்கப்பட்டதாக கருதப்பட்டு மற்றும் உண்மைகள் மற்றும் பதிவுகளின்படி கிடைக்கக்கூடிய ஆவணங்களின் அடிப்படையில், சிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க மேலதிக நடவடிக்கைகளை WDRC மேற்கொள்ளும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

தேதி : 19.11.2026
இடம் : சென்னை

கிளை மேலாளர், இந்தியன் வங்கி, மேற்கு சைதாப்பேட்டை கிளை,
வேண்டுமென்றே கடன் திரும்பச் செலுத்தாதோர் கண்டறியும் குழு சார்பாக.

சென்னை சொத்து மீட்பு துறை

வேங்க் ஆஃப் இந்தியா — Relationship beyond banking

"ஸ்டார் ஹவுஸ்", 4வது தளம், எண்.30, எர்ரபாலு தெரு, சென்னை - 600 001. போன்: 66777459 / 469 / 462 / 508
மின்னஞ்சல்: AssetRecovery.Chennai@bankofIndia.bank.in

SARFAESI சட்டம், 2002-ன் படியான மின்-ஏல விற்பனை அறிவிப்பு மற்றும் கடன்தார்/ஜாமீன்தார்/கருக்கான அறிவிப்பு

2002 ஆம் ஆண்டு கடனீட்புச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்புச்சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச்சட்டத்தின் கீழ் மற்றும் அதற்று தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்புச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல அறிவிப்பு

கடன்தார்கள் / ஜாமீன்தார்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி பேங்க் ஆஃப் இந்தியா, அவர்களால் சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. **பேங்க் ஆஃப் இந்தியா, பின்வரும் கிளைகளுக்கு** கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தார்(கள்) / ஜாமீன்தார்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலுவை தொகையினை வசூலிக்கும் பொருட்டு சொத்தானது **" உள்ள இடத்தில் உள்ளவாறு"** மற்றும் **"என்ன உள்ளதோ அப்படியே"** எனும் அடிப்படையில் **24.12.2026** அன்று விற்பனை செய்யப்படவிருக்கிறது. **சொத்துக்களின் விவரங்கள், குறைந்தபட்ச கேட்பு விலை மற்றும் டேவணித்தொகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

வ.எண்.1 தாம்பரம் கிளை : கடன்தார் / ஜாமீன்தார்(கள்) பெயர் : 1. திருமதி. விஜி.G (இணை கடன்தார்) மற்றும் சட்டப்பூர்வ வாரிசுதாரர் லேட். திரு. கணேசன்.G (கடன்தார்), 2. அஷ்வந்த் (மைனர்) பிரதிநிதியாக இணை கடன்தார் திருமதி. விஜி.G, சட்டப்பூர்வ வாரிசுதாரர் லேட். திரு. கணேசன்.G, (கடன்தார்).

தற்போதைய நிலுவைத் தொகை: ரூ.27,57,440/- மேலும் 16.11.2026 முதல் வருடத்திற்கு 7.60% வட்டி மற்றும் மாதாந்திர வட்டியுடன் பிற கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள் சேர்த்து.

அசையா சொத்தின் விபரங்கள்: **அட்டவணை - A சொத்து :** காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, எண்.10, பெருங்கொளத்தூர் கிராமம், அங்கீகார எண்.82/2005, 29.08.2005 தேதியிட்ட கடித எண்.L1/19348/2005ன்படி அங்கீகாரம் பெற்ற **"கண்ணகி நகர்"** என்று அறியப்படுகிற மனைப்பிரிவில் பட்டா எண்.889ன் கீழ் சர்வே எண்.31 மற்றும் பட்டாவின்படி துணைப்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.31/1A1A1A1A1ன்படி மனை எண்.5ல் உள்ள **1960 சதுர அடி** காலி குடியிருப்பு மனை. மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். உறுப்பினர் செயலர் CMDA, சென்னை - 600 008ன் கீழ் உரிமம் கொடுக்கப்பட்டுள்ள பெருங்கொளத்தூர் டவுன் பஞ்சாயத்து-ன் செயல் அதிகாரி அவர்களால் வழங்கப்பட்டுள்ள 14.05.2018 தேதியிட்ட பிளானிங் பர்மிட் எண். PP/D/65828/036/18-19 மற்றும் இந்த அலுவலக செயல்முறைகள் விதிமுறைகளின்படி கட்டிட வரைப்பட அனுமதி எண்.D Dis.எண்.PPA/370/2018/A2 மற்றும் 26.06.2018 தேதியிட்ட கட்டிட உரிமம் எண்.036/18-2019, இந்த குறிப்பிட்டுள்ள கட்டிட உரிமம் 25.06.2023 வரை செல்லத்தக்கதாக உள்ளது. **எல்லைகள் :** வடக்கில் : 24 அடி சாலை, தெற்கில் : சர்வே எண்.103, கிழக்கில் : மனை எண்.6, மேற்கில் : மனை எண்.4. **அளவுகள் :** வடக்கு பகுதியில் - 40 அடி, தெற்கு பகுதியில் - 40 அடி, கிழக்கு பகுதியில் - 52 அடி, மேற்கு பகுதியில் - 46 அடி. மேற்குறிப்பிட்டுள்ள சொத்து நென் சென்னை பதிவு மாவட்டம், படப்பை துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட பெருங்கொளத்தூர் டவுன் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டது.

அட்டவணை - B சொத்து : (இதன் மூலம் சொல்லப்பட்டுள்ள சொத்து) : மனை எண்.5, கண்ணகி தெரு, பெருங்கொளத்தூர், சென்னை - 600 063 என்ற முகவரியில் அட்டவணை -A'ல் குறிப்பிட்டுள்ள சொத்து நிலத்தில் **468 சதுர அடி** பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் முதல் தளத்தில் **950 சதுர அடி** RCC டிரெஸ்டு கட்டிடம், ப்ளாட் எண்.F1 மற்றும் அங்குள்ள அனைத்து வழ